www.Padasalai.Net www.CBSEtips.in

A 9 E036

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி

தமிழ்

மதிப்பெண்கள் : 100

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 15×1=15

1) மிசை - என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

2) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனறித்தேர்வு

இ) தேசியத் திறனறி கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

3) காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பபதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை

இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

4) தமிழ்விடுதூது _______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

5) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

6) <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

7) பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக _______

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் _______

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை

இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

8) பொருந்தாத இணை எது?

அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு இ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

9) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் _______

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

10) திருக்குறள் _______ வெண்பாக்களால் ஆன நூலாகும்

அ) சிந்தியல் ஆ) குறள் இ) நேரிசை ஈ) இன்னிசை

11) 'வலவன் ஏவா வானூர்தி' என்ற அறிவியல் சிந்தனையைக் குறிப்பிடும் நூல் _______

அ) புறநானூறு ஆ) கலித்தொகை

இ) வைரமுத்து கவிதைகள் ஈ) சீவகசிந்தாமணி

பாடலைப் படித்து பின்வரும் (12, 13, 14, 15) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) புறநானூறு ஆ) நாலடியார் இ) பெரியபுராணம் ஈ) தமிழ்விடுதூது

13) இப்பாடலை இயற்றியவர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) திருவள்ளுவர் ஈ) பெயர் அறிய இயலவில்லை

14) விளம்பக்கேள் - பொருள் கூறுக

அ) சொல்லுதல் ஆ) கேட்டல் இ) செப்புதல் ஈ) கூறுவதைக் கேட்பாயாக

15) முத்தமிழ் - பின்வருவனவற்றுள் எது சரியானது?

அ) துறை, தாழிசை, விருத்தம் ஆ) குறவஞ்சி, பள்ளு, தூது

இ) சத்துவம், இராசசம், தாமசம் ஈ) இயல், இசை, நாடகம்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
(வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4×2=8

16) 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?

17) விடைகளுக்கேற்ற வினா அமைக்க

அ) திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலைக் கால்டுவெல் எழுதியுள்ளார்.

ஆ) ஏறுதழுவுதல், தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு.

18) ஓரறிவு உயிர்கள் யாவை?

19) 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?

20) இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

21) 'மிகுதியான்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5×2=10

22) வீணையோடு வந்தாள். கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

23) வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.

24) சொற்களைத் தொடர்களாக மாற்றுக.

அ) பதிவு செய் (செய்வினை) ஆ) இயங்கு (செயப்பாட்டுவினை)

25) மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்

26) கலைச்சொற்கள் தருக. அ) missile- ஆ) excavation -

27) ஒரே சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக

எழுத்தாணி கொண்டு _______ தமிழை, ஏவுகணையில் _______ எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்

28) அடைப்புக்குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடரை மாற்றி எழுதுக.

இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடர்)

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

29) ஏறுதழுவுதல், திணை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

30) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நீர் சுழற்சியின்போது ஆற்றல் பரிமாற்றம் நிகழ்கிறது. இதனால் வெப்பநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. மண்ணிலுள்ள தாவரங்களின் நுண்ணிய இலைத்துளைகள் வழியாக நீர் ஆவியாக மேற்செல்லும். வளிமண்டலத்தில் நைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் வாயுக்கள் அதிகளவில் இருக்கின்றன. வளிமண்டல நீர் சுழற்சியால் நீராவியானது உலகெங்கும் நகர்கிறது. மேகத்துகள்கள் மோதுகின்றன. அதனால் மழைபொழிகிறது.

1) ஆற்றல் பரிமாற்றம் எப்போது நிகழ்கிறது?

2) வளிமண்டலத்தில் அதிக அளவில் உள்ள வாயுக்கள் எவை?

3) மழை எதனால் பொழிகிறது?

31) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(வினா எண். 34க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) 2×3=6

32) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

33) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

34) அடிபிறழாமல் எழுதுக.

'ஒன்றறிவதுவே' எனத் தொடங்கும் தொல்காப்பியரின் பாடல். (அல்லது)

'காடெல்லாம்' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2×3=6

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37) உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- 5×5=25

38) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக? (அல்லது)

உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

39) அடுத்த தலைமுறைக்குத் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக. (அல்லது)

அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணைய வழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

www.Padasalai.Net


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



40) நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை அறிந்து எழுதுக.

41) காட்சியைக் கண்டுக் கவினுற எழுதுக.



42) பொன்மொழிகளை மொழிபெயர்க்க:-

1) You have to dream before your dreams come true - A.P.J. Abdul Kalam.
2) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru
3) A nations culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi
4) The biggest problem is the lack of love and charity - Mother Teresa.
5) An early morning walk is a blessing for the whole day - Henry David.

பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- 3×8=24

43) அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வுக்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. *(அல்லது)*

ஆ) 'நீரின்றி அமையாது உலகு' என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. *(அல்லது)*

ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45) அ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக்கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக. *(அல்லது)*

ஆ) உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

*******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com